**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 71 /2023**

## Prosecution Witness : 1

| | | | |
|---|---|---|---|
| **Name** | : கோகுல் மையூர பிரியன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : |

**14.05.2024**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு. **கோகுல் மையூர பிரியன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>எதிரி ஆஜர்</u>

1. நான் தற்போது சீலப்பாடி PWD Colony ல் குடியிருந்து வருகிறேன். போட்டித்தேர்விற்கு படித்துக்கொண்டுஇருக்கிறேன்.

2.28.04.2022 ம் தேதி எனது பாட்டிக்கு சாமிக்கும்பிடுவதற்காக குடும்பத்துடன் சென்னைக்கு சென்றோம். அங்கிருந்து எனது அப்பாவின் சிகிச்சைகாக கோயம்புத்துார் கேஎம்சிஹெச் மருத்துவமனைக்கு சிசிக்சைக்கு சென்றோம். சிகிச்சை முடித்துவிட்டு 24.08.2022 ம் தேதி வீட்டிற்கு வந்து பார்த்தோம். அப்போது வீட்டின் மெயின் கேட் பூட்டு உடைந்து இருந்தது. உள்ளே சென்று பார்த்த போது பெட்ரூமில் இருந்த கபோர்ட் திறந்து இருந்தது பொருட்கள் சிதறிக்கிடந்தது. கபோர்டில் இருந்த 3 பவுன் செயினை காணவில்லை . அதைபார்த்துவிட்டு அன்றே போலிசில் புகார் கொடுத்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் . புகாரில் அதசாஆ. 1 ஆகும். அதன் பின்னர் போலிசார் என் வீட்டில் திருடிய நபரை கண்டுபிடித்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நகையை உருக்கி தங்க கட்டியாக வைத்திருந்தாக சொன்னார்கள்.

4. எதிரி தான் திருடியதாக போலிசார் அடையாளம் காட்டினார்கள் . தங்ககட்டியை நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப் படும் புகைப்படத்தில் உள்ள தங்க கட்டியை தான் நான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2024.05.16 12:09:05 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 71 /2023**

## Prosecution Witness : 2

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலசுப்பிரமணியன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : |

**14.05.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. பாலசுப்பிரமணியன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**எதிரி ஆஜர்**</u>

1. நான் தற்போது PWD colony ல் குடியிருந்து வருகிறேன். போக்குவரத்து துறையில் உதவி மேலாளரா பணிபுரிந்து ஓய்வில் உள்ளேன். அசா1 கோகுல் மையூர பிரியன் எனது தம்பி மகன் .

2. 28.04.22 ம் தேதி எனது தம்பி பாலமுரளிகிருஷ்ணன் குடும்பத்துடன்சென்னை சென்று இருந்தார். அங்கிருந்து எனது தம்பியின் சிகிச்சைக்கா கோயம்புத்துார் சென்று விட்டு 8 மாதம் வந்து பார்த்த போது வீட்டின் கதவு உடைந்து இருந்தது.வீட்டின் உள்ள கபோர்ட் பீரோ இழுத்து போடப்பட்டிருந்தது. 3 பவுன் நகையை காணவில்லை . அதன் பின்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க அசா. 1 போலிசில் புகார் கொடுத்தார். நான் அதில் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும்

புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து அதசாஆ 3 போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2024.05.16 12:09:15 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 71 /2023**

## Prosecution Witness : 3

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ரஜினிதேவி** | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : |

**14.05.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 4 திரு.ரஜினி தேவி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>எதிரி ஆஜர்</u>

1. நான் தற்போது PWD colony ல் குடியிருந்து வருகிறேன். இந்தியன் வங்கியில் வேலை செய்து வருகிறேன். அசா 1 கோகுல் மையூரபிரியன் எனது மகன் . கடந்த 28.04.22 ம் தேதி எனது அம்மா இறந்த 1 ஆண்டு முடிந்ததால் சாமிக்கும்பிடுவதற்காக குடும்பத்துடன் சென்னை சென்றோம்.

2. அங்கிருந்த போது எனது கணவர் பாலமுரளிகிருஷ்ணனுக்கு உடல் நிலை சரியில்லாமல் போனதால் அங்கிருந்து கோயம்புத்தூருக்கு கேஎம் சிஹெச் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். சிகிச்சை முடித்து 28.03.22 ம் தேதி வீட்டிற்கு வந்து பார்த்த போதுமெயின் கேட் பூட்டு உடைந்து இருந்தது. உள்ளே சென்று பார்த்த போது கபோர்ட்டில் இருந்த பொருட்கள் சிதறிக்கிடந்தது அங்கிருந்த பொருட்களை சரிபார்த்த போது நான் வைத்திருந்த 3 பவுன் செயின் காணவில்லை . எனவே இது

சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க எனது மகன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA Digitally signed by V PRIYA Date: 2024.05.16 12:09:22 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 71 /2023**

## Prosecution Witness : 4

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சிவராஜன்** | **Caste** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |
| | | **Dated** | **:** |

**14.05.2024**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 திரு.சிவராஜன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் தற்போது PWD colony குடியிருந்து வருகிறேன். IT company ல் வேலை செய்து வருகிறேன்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் . பார்வை மகஜர் உள்ள முதல் கையெழுத்து அதசாஆ.4 ஆகும்.

3. கடந்த 24.08.22 ம் தேதி சம்பஇடத்தில் போலிசாரிடம் திருட்டு வழக்கு சம்பந்தமாக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA Digitally signed by V PRIYA Date: 2024.05.16 12:09:28 +0530

Judicial Magistrate No.I
Dindigul.